# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 84/மா/2022**

**நாள் : 8.8.2022**

திரு. சி. சுபியான்,
சின்னப்புதூர், சேலம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
சேலம் மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

சேலம், சின்னப்புதூர், மணியக்காரர் தெரு, எண்.491/0 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. சி. சுபியான் என்பவரின் 24.06.2022 நாளிட்ட மனு 27.06.2022 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 84/மா/2022 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சேலம், சின்னப்புதூர், மணியக்காரர் தெரு, எண்.491/0 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. சி. சுபியான் என்பவர் தனது முறையீட்டு மனுவில்,

“ஐயா, நான் விலங்குகள் நல ஆர்வலராக செயல்பட்டுவருகிறேன். நான் கடந்த 21.09.2021 தேதியன்று சேலம் மாநகராட்சி WhatsApp எண்ணான 8300383003 என்ற எண்ணிற்கும், அதனைத் தொடர்ந்து 04.10.2021–ஆம் தேதி முதல்வரின் முகவரி இணையதளம் வாயிலாக புகார் பதிவு செய்திருந்தேன். விண்ணப்ப எண். (TN/MAWS/SLM/P/PORTAL/040CT21/2097353) அப்புகாரில் சேலம் மாநகராட்சியில் நடைபெற்றுவரும் தெருநாய்களுக்கான கருத்தடை திட்டத்தில் Animal Birth Control (Dog) Rules, 2001 பிரிவு 4-ன்படி Monitoring Committee அமைக்கப்படாமல் செயல்படுவதால் கருத்தடை திட்டத்தை கண்காணிக்க முடிவதில்லை எனவும், சேலம் மாநகராட்சி நாய்பிடி பணியாளர்களால், 20 ஆண்டுகளுக்கு முன்பு தடை செய்யப்பட்ட சுருக்குக் கம்பி பயன்படுத்தப்பட்டு விலங்குவதை நடைபெறுகிறது எனவும், ABC (Dog) Rules, 2001 விதியானது மீறப்படுகிறது எனவும் ஆதாரங்களுடன் இணைத்து புகார் அளித்திருந்தேன். மேலும் மேற்கண்ட குற்றங்களை குறைக்கும் பொருட்டும் கருத்தடை திட்டத்தை கண்காணித்திடவும், ஆலோசனை வழங்கவும், தெரு நாய்களின் உரிமைகளை பாதுகாத்திட ஏதுவாக சேலம் மாநகராட்சியில் Animal Birth Control (Dog)

Rules, 2001 பிரிவு 4 படி Monitoring Committee உடனடியாக அமைக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்திருந்தேன்.

மேற்கண்ட புகாருக்கு சேலம் மாநகராட்சியின் மாநகர நல அலுவலர் ந.க.எண்.எப்3/7099/2015, 09/10/2021 தேதியிட்ட கடிதத்தில் சேலம் மாநகராட்சியில் Animal Birth Control (Dog) Rules, 2001 பிரிவு 4 படி Monitoring Committee அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என தெரிவித்திருந்தார்.

ஆனால், இரண்டு மாதங்கள் ஆகியும் "Monitoring Committee" அமைக்கப்படாததால் 03.01.2022 அன்று சேலம் மாநகராட்சியின் WhatsApp எண்ணான 8200383003 என்ற எண்ணிற்கும், சேலம் மாநகராட்சி இ-மெயில் முகவரியான commr.salem@tn.gov.in என்ற முகவரியில் சேலம் மாநகராட்சி ஆணையருக்கு மேல்முறையீட்டு மனுவும் அனுப்பியிருந்தேன்.

ஆனால், இன்றைய நாள் 24.06.2022 வரை சேலம் மாநகராட்சியில் தெரு நாய்களுக்கான கருத்தடை திட்டம் செயல்பாட்டில் இருந்தும், Animal Birth Control (Dog) Rules, 2001, பிரிவு 4-படி Monitoring Committee அமைக்கப்படாமல் உள்ளது. இதிலிருந்து சேலம் மாநகராட்சி அலுவலர்களான மாநகராட்சி ஆணையர், மாநகர நல அலுவலர் மற்றும் இதர அலுவலர்கள் வேண்டுமென்றே தனது பணிகளை செய்யாமலும், சட்டத்தின் விதிகளை மதிக்காமலும் இருப்பது தெரியவருகிறது. ஆகவே, தாங்கள் இம்முறையீட்டினை ஏற்றுக்கொண்டு தெரு நாய்களின் உரிமைகளை பாதுகாத்திட கருத்தடை திட்டத்தை கண்காணித்திட ஏதுவாக சேலம் மாநகராட்சியில் Animal Birth Control (Dog) Rules, 2001, பிரிவு 4-படி Monitoring Committee அமைக்க உத்தரவிடுமாறும், சட்டத்தினை மீறிய சேலம் மாநகராட்சி அலுவலர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறும், மேலும், தாங்கள் தக்கதென கருதும் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, சேலம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது. அவர் தனது 25.7.2022 நாளிட்ட அறிக்கையில்,**

"திரு. சுபியான் அவர்களின் 24.06.2022 நாளிட்ட முறையீட்டு மனு சம்பந்தமாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 27.7.2022 அன்று பிற்பகல் 1.00 மணி அளவில் நடைபெற உள்ள விசாரணையில் கலந்து கொள்ளுமாறு உத்திரவிடப்பட்டுள்ளது.

பிராணிகள் இனப்பெருக்க கட்டுப்பாட்டு (நாய்கள்) விதிகள், 2001-ன் வழிகாட்டுதல்படி சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சுற்றித்திரியும் தெருநாய்கள் பிடிக்கப்பட்டு அவற்றிற்கு இனப்பெருக்க கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு, உரிய பராமரிப்பிற்கு பின் அவற்றை பிடிக்கப்பட்ட இடத்திற்கே கொண்டு சேர்த்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மாநகராட்சியில் தற்போது தெருநாய்களை பிடிக்க, தடைசெய்யப்பட்ட சுருக்கு கம்பிகள் மடி வலைகள் ஏதும் பயன்படுத்தப்படுவதில்லை. தன்னார்வலர்களால் மாநகராட்சிக்கு வாங்கி வழங்கப்பட்டுள்ள 2 எண்ணிக்கையிலான பட்டர்ஃபிளை வலைகள் பயன்படுத்தப்பட்டு வந்தது. மேலும் 15.11.2021ல் இம்மாநகராட்சியால் 4 எண்ணிக்கையிலான பட்டர்ஃபிளை வலைகள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

பிராணிகள் இனப்பெருக்க கட்டுப்பாட்டு (நாய்கள்) விதிகள், 2001, பகுதி-II – பிரிவு 3 – துணைபிரிவு (II)ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி தெருநாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை கண்காணித்திட, 11.7.2022 அன்று சேலம் மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பிராணிகள் நல ஆர்வலர்களை உள்ளடக்கிய கண்காணிப்பு குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதால் மேற்படி மனுதாரரின் மனு மீதான நடவடிக்கையை கைவிடுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

**மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவ அழைப்பாணைகள் மூலம் 27.07.2022 அன்று நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டனர்.**

மனுதாரர் 27.07.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :

“சேலம் மாநகராட்சியில் நடைபெற்றுவரும் தெருநாய்களுக்கான கருத்தடை திட்டத்தில் Animal Birth Control (Dog) Rules, 2001 பிரிவு 4–ன்படி கண்காணிப்புக் குழு அமைக்கப்படாததால், மேற்கண்ட திட்டம் சரியாக செயல்படுத்தப்பட்டு வருகிறதா என்கின்ற விவரம் என் போன்ற விலங்குகள் நல ஆர்வலர்களுக்கு தெரியவில்லை. எனவே, சேலம் மாநகராட்சியில் மேற்கண்ட திட்டத்திற்கான கண்காணிப்புக் குழு அமைத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தெருவில் திரியும் நாய்களை பிடிக்கும்போது ஏற்கனவே தடை செய்யப்பட்டுள்ள சுருக்குக் கம்பிகளைக்கொண்டு மாநகராட்சிப் பணியாளர்கள் நாய்களை பிடிக்கின்றனர். இதனால் அவை துன்புறுத்தப்படுகின்றன. இது பிராணிகள் வதை தடுப்புச் சட்டம், 1960ன் பிரிவு 11ன்–படி குற்றமாகும். எனவே, வருங்கால்ங்களில் தெருநாய்களை பிடிக்கும்போது வழிகாட்டு நெறிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள Butterfly Net வைத்து பிடித்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

தெருவில் உள்ள நாய்களை பிடிப்பது குறித்த வழிகாட்டு நெறிமுறைகளின் விதிகளின் நகலினை Prevention of Cruelty to Animals ( Capture of Animals) Rules, 1979 இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் எனது 24.6.2022 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

**27.07.2022 அன்றைய நேரடி விசாரணையில் சேலம் மாநகராட்சியில் மாநகர நல அலுவலர் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

“மனுதாரர் திரு சுபியான் தனது மனுவில் கேட்டுக்கொண்டுள்ளவாறு தெரு நாய்களுக்கு இனப்பெருக்க கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை நடவடிக்கைகளை கண்காணிக்க, மாநகராட்சி ஆணையர், மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பிராணிகள் நல ஆர்வலர்களை உள்ளடக்கிய 7 பேர் கொண்ட கண்காணிப்புக் குழு ஒன்று 11.7.2022 அன்று அமைக்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தெரு நாய்களை பிடிக்கும்போது தடை செய்யப்பட்ட சுருக்கு வலைகளைக் கொண்டு பிடிப்பதில்லை. மாறாக வழிகாட்டு நெறிமுறைகளில் கண்டுள்ளவாறு, மாநகராட்சியால் வழங்கப்பட்டுள்ள 4 பட்டர்பிளை வலை மற்றும் தன்னார்வலர்கள்

வாங்கிக்கொடுத்துள்ள 2 பட்டர்பிளை வலை ஆகியவற்றை கொண்டுதான் தெரு நாய்கள் பிடிக்கப்படுகின்றன என்கின்ற விவரத்தையும், தெருநாய்களை பிடிக்கும்போது அவை எவ்வகையிலும் துன்புறுத்தப்படுவதில்லை என்கின்ற விவரத்தையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம், சேலம் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் சேலம் மாநகராட்சி மாநகர நல அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் தெரியவருகின்றன :

மனுதாரர் திரு. C. சுபியான் ஒரு விலங்குகள் நல ஆர்வலர் என்பதும், சேலம் மாநகராட்சியில் நடைபெற்ற தெரு நாய்களுக்கான கருத்தடைத் திட்டத்தில், Animal Birth Control (Dog) Rules, 2001–ன் பிரிவு - 4ன்படி Monitoring Committee அமைக்க வலியுறுத்தி உள்ளதாகவும் தெரியவருகிறது. மேலும், கண்காணிப்புக்குழு (Monitoring Committee) அமைக்கப்படாமல் உள்ளதால், தெரு நாய்களுக்கு கருத்தடைத் திட்டத்தை கண்காணிக்க முடியாமலும், நாய்பிடி பணியாளர்களால் 20 ஆண்டுகளுக்கு முன்பு பயன்படுத்தப்பட்டு வந்த சுருக்குக் கம்பி பயன்படுத்தப்பட்டு விலங்குவதை நடைபெறுவதாகவும், அதனால் Animal Birth Control (Dog) Rules, 2001- மீறப்படுவதும், இது குறித்து மனுதாரர் 21.9.2021 முதல் தொடர்ந்து புகார் அளித்தும் 24.6.2022 வரை கண்காணிப்புக் குழு அமைக்கப்படவில்லை என்பதால், உரிய நடவடிக்கை எடுக்கவேண்டி, இம்முறைமன்றத்தை அணுகியிருப்பதும் தெரியவருகிறது. இந்திய அரசு, 24.12.2001 நாளிட்ட அரசிதழில் (Gazatte) ‘Animal Birth Control (Dog) Rules, 2001-ஐ அறிவிக்கை செய்துள்ளது. அவ்விதிகளின், விதி-4-ல் Monitoring Committee அமைப்பது குறித்து பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**4. Formation of Committee:** A monitoring committee consisting of the following persons shall be constituted by the local authority namely ;

(a) Commissioner/Chief of the local authority who shall be the ex-officio Chairman of the Committee.
(b) A representative of the Public Health Department of the local authority.
(c) A representative of the Animal Welfare Department if any of the local authority.
(d) A veterinary doctor.
(e) A representative of the district Society for Prevention of Cruelty to Animals (SPCA)
(f) At least two representatives from the Animal Welfare Organizations operating within the said local authority.
(g) A Representative of the people who is a humanitarian or a well known individual who has experience in animal welfare in the locality.

மேற்சொன்ன விதிகளில் கூறப்பட்டுள்ளவாறு சேலம் மாநகராட்சியில் கண்காணிப்புக்குழு அமைக்கப்பட வேண்டும் என்ற மனுதாரரின் தொடர் முயற்சியின் பேரிலும், இம்முறைமன்றத்துக்கு 24.6.2022 அன்று முறையீடு செய்ததின் பேரிலும், 11.7.2022 நாளிட்ட சேலம் மாநகராட்சி ஆணையாளரின் செயல்முறைகள் எண். எப்4/13135/2022-ன்படி, சேலம் மாநகராட்சியில் தெருநாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை கண்காணிக்க கீழ்க்கண்ட விவரப்படி அலுவலர்கள் மற்றும் பிராணிகள் நல ஆர்வலர்களை உறுப்பினர்களாகக் கொண்ட கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது என்பதும் தெரியவருகிறது.

| வ. எண். | குழுவில் இடம் பெற வேண்டியவர்கள் விவரம் | **கண்காணிப்பு குழுவினர் பெயர், பதவி விவரம்** | **கண்காணிப்பு குழு பதவி** |
|---|---|---|---|
| 1. | ஆணையாளர்/உள்ளாட்சி அமைப்பின் தலைமை பொறுப்பில் உள்ளவர் | ஆணையாளர், சேலம் மாநகராட்சி. | தலைவர் |
| 2. | உள்ளாட்சி அமைப்பில் உள்ள பொது சுகாதாரத்துறையின் பிரதிநிதி | துணை இயக்குநர் / மாநகர நல அலுவலர், சேலம் மாநகராட்சி. | உறுப்பினர் / செயலர் |
| 3. | உள்ளாட்சி அமைப்பில் உள்ள விலங்குகள் நலத்துறையின் பிரதிநிதி | - இல்லை - | உறுப்பினர் |
| 4. | கால்நடை மருத்துவர் | கால்நடை மருத்துவர். சேலம் 636 007. | உறுப்பினர் |
| 5. | மாவட்ட பிராணிவதை தடுப்பு சங்கத்தின் பிரதிநிதி | சுகாதார ஆய்வாளர், மாவட்ட பிராணிவதை தடுப்பு சங்கம், அஸ்தம்பட்டி, சேலம் - 636 007. | உறுப்பினர் |
| 6. | உள்ளாட்சி அமைப்பிற்கு உட்பட்ட பகுதியில் இயங்கும் விலங்குகள் நல அமைப்பு பிரதிநிதிகள் | 1.வித்யாலஷ்மி, தன்னார்வலர், Resquing Animal in Need, Salem. சேலம் - 636 004. | உறுப்பினர் |
| | | 2.செல்வி.வீணாகுருபாதம், தன்னார்வலர், Royal Animal Welfare Organisation Trust, Salem. | உறுப்பினர் |
| | | 3. திரு. எஸ். கிருஷ்ணகுமார், தன்னார்வலர், சேலம் பிராணிகள் நலச் சங்கம். | உறுப்பினர் |
| 7. | மனிதநேயம் மிக்க மக்கள் பிரதிநிதி (அ) பிராணிகள் நலனில் அனுபவம் வாய்ந்த தனி நபர் ஒருவர். | திருமதி. சரஸ்வதி ஷெட்டி, சேலம் - 636 007. | உறுப்பினர் |

மேலும், மனுதாரர் தெரிவித்துள்ளவாறு சேலம் மாநகராட்சியில் தெரு நாய்களை சுருக்குக் கம்பிகள் கொண்டு பிடிக்கப்படுவதில்லை என்றும், 'Butterfly Net' வைத்துதான் பிடிக்கப்படுகின்றன என்பதும் தெரியவருகிறது.

**விரிவான விசாரணைக்குப் பின் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது :**

மனுதாரர் திரு.C. சுபியான், இந்திய அரசின் 24.12.2001 நாளிட்ட அரசிதழில் வெளியான 'Animal Birth Control' (Dog) Rules, 2001-ன் விதி 4-ன்படி கண்காணிப்புக் குழு 'Monitoring Committee' அமைத்து தெரு நாய்கள் பிடிப்பதை கண்காணிக்குமாறு 24.9.2021 முதல் 24.6.2022 வரை சுமார் 9 மாதங்கள் சேலம் மாநகராட்சியை தொடர்ந்து வலியுறுத்தியும், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் மனு அளித்த பின்புதான் 11.7.2022 அன்று கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக மனுதாரர் தொடர்ந்து எடுத்த முயற்சிகளை இம்முறைமன்றம் பாராட்டுகிறது.

Animal Birth Control (Dog) Rules, 2001, விதி 4-ன்படி சேலம் மாநகராட்சியால் தெருநாய்களின் இனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை கண்காணிக்க

கண்காணிப்புக்குழு (Monitoring Committee) அமைக்க வேண்டும் என்ற மனுதாரரின் கோரிக்கையினை ஏற்று 11.7.2022 நாளிட்ட செயல்முறைகள் ஆணையில் சேலம் மாநகராட்சி ஆணையரைத் தலைவராகக் கொண்ட கண்காணிப்புக் குழு அமைத்து உத்தரவிட்டதையும், தமிழ்நாட்டில் சேலம் மாநகராட்சியில் தான் முதலாவதாக இத்தகைய கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளதையும் இம்முறைமன்றம் பதிவு செய்து சேலம் மாநகராட்சி ஆணையருக்கும் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் அனைவருக்கும் பாராட்டுதலை இம்முறைமன்றம் தெரிவித்துக் கொள்கிறது. இருப்பினும் இக்கண்காணிப்புக் குழு திறம்பட செயல்பட உரிய நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ள சேலம் மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

இருப்பினும், மனுதாரர் 21.9.2021 முதல் தொடர்ந்து மனு அளித்தும், 24.6.2022 வரை நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளாமல், இம்முறைமன்றத்துக்கு மனு செய்த பின்னரே, சுமார் 9 மாதங்களுக்குப் பின்னர் 11.7.2022 அன்று தான் கண்காணிப்புக் குழு (Monitoring Committee) அமைக்கப்பட்டுள்ளது. மற்றும் மனுதாரருக்கு இது குறித்தான அறிவிப்பு ஏதும் வழங்கவில்லை. இது ஏற்கத்தக்கதல்ல. மனுதாரரின் நியாயமான கோரிக்கைக்காக மனுதாரரை சுமார் 9 மாதங்கள் அலைக்கழித்த செயலை இம்முறைமன்றம் கண்டிக்கிறது.

'Animal Birth Control (Dog) Rules, 2001-ன் விதி-5ல் கூறியுள்ளவாறு கண்காணிப்புக் குழுவின் செயல்பாடுகளை சேலம் மாநகராட்சியின் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் உரியமுறையில், ஆய்வு செய்ய வேண்டும் என்று இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

மனுதாரர் கோரியவாறு சுருக்கு வலைகளைக் கொண்டு தெரு நாய்களை பிடிக்காமல், 'Butterfly Net' வைத்தே பிடிக்க வேண்டும் என்றும், 'Butterfly Net' போதிய அளவில் இருப்பு இல்லையெனில் தேவையான அளவு புதிதாக கொள்முதல் செய்து 'Butterfly Net' கொண்டே தெருநாய்களைப் பிடிப்பதை உறுதி செய்யுமாறு சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்களுக்கு உரிய உத்தரவுகளை பிறப்பிக்குமாறும் சேலம் மாநகராட்சி ஆணையரை இம்முறைமன்றம் அறிவுறுத்துகிறது.

'Animal Birth Control (Dog) Rules, 2001-ன் விதி 4-ன்படி தெரு நாய்களின் இனப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை கண்காணிக்க கண்காணிப்புக்குழு 'Monitoring Committee' ஒன்றை மாநகராட்சிகளிலும், நகராட்சிகளிலும் உடனடியாக அமைக்கவும், தெருநாய்களை 'Butterfly Net' கொண்டுதான் பிடிக்கவேண்டும் எனவும் அறிவுறுத்தி அனைத்து மாநகராட்சி ஆணையர் / நகராட்சி உதவி ஆணையர்களுக்கு சுற்றறிக்கை ஒன்றை அனுப்புமாறு நகராட்சி நிர்வாக இயக்குநரை இம்முறைமன்றம் கேட்டுக்கொள்கிறது. மேலும், மேற்குறிப்பிட்டுள்ளவாறு கண்காணிப்புக் குழுக்கள் ஒவ்வொரு பேரூராட்சியிலும் அமைக்க அறிவுறுத்தி அனைத்து பேரூராட்சிகளின் செயல் அலுவலர்களுக்கும் சுற்றறிக்கை ஒன்றை அனுப்புமாறு பேரூராட்சிகளின் இயக்குநரை இம்முறைமன்றம் கேட்டுக்கொள்கிறது.

2022–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 8–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. சி. சுபியான்,
491/0, மணியக்காரர் தெரு,
சின்னப்புதூர், சேலம் - 636 007.

2. ஆணையாளர்,
சேலம் மாநகராட்சி,
நாவலர் நெடுஞ்செழியன் சாலை,
சேலம் - 636 001.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.
4. பேரூராட்சிகளின் ஆணையாளர்,
பேரூராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.
5. இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக.